ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# பெரியாழ்வார் அருளிச்செய்த
# ॥ தன்முகத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தன்முகத்து ॥

## அம்புலிப் பருவம்

‡தன்முகத்துச் சுட்டி⋆ தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்⋆
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப்⋆ புழுதி அளைகின்றான்⋆
என் மகன் கோவிந்தன்⋆ கூத்தினை இள மா மதீ!⋆
நின்முகம் கண்ணுள ஆகில்⋆ நீ இங்கே நோக்கிப் போ (1)

என் சிறுக்குட்டன்⋆ எனக்கோர் இன்னமுதெம் பிரான்⋆
தன் சிறுக் கைகளால்⋆ காட்டிக் காட்டி அழைக்கின்றான்⋆
அஞ்சன வண்ணனோடு⋆ ஆடல் ஆட உறுதியேல்⋆
மஞ்சில் மறையாதே⋆ மா மதீ! மகிழ்ந்தோடிவா (2)

சுற்றும் ஒளிவட்டம்⋆ சூழ்ந்து சோதி பரந்தெங்கும்⋆
எத்தனை செய்யினும்⋆ என்மகன் முகம் நேரொவ்வாய்⋆
வித்தகன் வேங்கட வாணன்⋆ உன்னை விளிக்கின்ற⋆
கைத்தலம் நோவாமே⋆ அம்புலீ! கடிதோடிவா (3)

சக்கரக் கையன்⋆ தடங்கண்ணால் மலர விழித்து⋆
ஒக்கலைமேல் இருந்து⋆ உன்னையே சுட்டிக் காட்டும்காண்⋆
தக்கதறிதியேல்⋆ சந்திரா! சலம் செய்யாதே⋆
மக்கள் பெறாத⋆ மலடன் அல்லையேல் வா கண்டாய் (4)

அழகிய வாயில்⋆ அமுத ஊறல் தெளிவுறா⋆
மழலை முற்றாத இளஞ்சொல்லால்⋆ உன்னைக் கூவுகின்றான்⋆
குழகன் சிரீதரன்⋆ கூவக்கூவ நீ போதியேல்⋆
புழையில ஆகாதே⋆ நின்செவி புகர் மா மதீ! (5)

தண்டொடு சக்கரம்⋆ சார்ங்கம் ஏந்தும் தடக்கையன்⋆
கண் துயில் கொள்ளக் கருதிக்⋆ கொட்டாவி கொள்கின்றான்⋆
உண்ட முலைப்பால் அறா கண்டாய்⋆ உறங்காவிடில்⋆
விண்தனில் மன்னிய⋆ மா மதீ! விரைந்தோடிவா (6)

பாலகன் என்று⋆ பரிபவம் செய்யேல்⋆ பண்டொரு நாள்
ஆலின் இலை வளர்ந்த⋆ சிறுக்கன் அவன் இவன்⋆
மேல் எழப் பாய்ந்து⋆ பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல்⋆
மாலை மதியாதே⋆ மா மதீ! மகிழ்ந்தோடிவா (7)

சிறியன் என்றென் இளஞ்சிங்கத்தை⋆ இகழேல் கண்டாய்⋆
சிறுமையின் வார்த்தையை⋆ மாவலியிடைச் சென்று கேள்⋆
சிறுமைப் பிழை கொள்ளில்⋆ நீயும் உன் தேவைக்குரியை காண்⋆
நிறைமதீ! நெடுமால்⋆ விரைந்துன்னைக் கூவுகின்றான் (8)

தாழியில் வெண்ணெய்⋆ தடங்கை ஆர விழுங்கிய⋆
பேழை வயிற்றெம் பிரான் கண்டாய்⋆ உன்னைக் கூவுகின்றான்⋆
ஆழி கொண்டுன்னை எறியும்⋆ ஐயுறவு இல்லை காண்⋆
வாழ உறுதியேல்⋆ மா மதீ! மகிழ்ந்தோடிவா (9)

‡மைத்தடங்கண்ணி⋆ யசோதை தன் மகனுக்கு⋆ இவை
ஒத்தன சொல்லி⋆ உரைத்த மாற்றம்⋆ ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன்⋆ விரித்த தமிழ் இவை⋆
எத்தனையும் சொல்ல வல்லவர்க்கு⋆ இடர் இல்லையே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥